


**31. 07. 2026**

தலைப்புச் செய்திகள்

1. நீட் விவகாரம் உள்ளிட்ட பிரச்சனைகளில் எதிர் கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் நாள் முழுமைக்கும் இன்று ஒத்திவைக்கப்பட்டன.

2. மேகதாது அணை விவகாரம் தொடர்பாக முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் தலைமையில் சென்னை தலைமை செயலகத்தில் ஆலோசனைக்கூட்டம் இன்று நடைபெறுகிறது.

3. தமிழ்நாட்டில் கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் இந்தாண்டு கூடுதல் மின் கட்டணம் செலுத்துவோரின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக மாநில மின்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் கூறியுள்ளார்.

4. வேளாண் நிதிநிலை அறிக்கையில் பயிர் கடன் முழுமையாக தள்ளுபடி செய்யும் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

5. நீலகிரி தேனி கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று இடி மின்னல் காற்றுடன் கூடிய கன, மிக கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இனி விரிவான செய்திகள்

*************

நாடாளுமன்றம்

நீட் விவகாரத்தில், போராட்டத்தில் ஈடுபட்ட மாணாக்கர் மீது, காவல்துறையினர் தாக்குதல் நடத்தியதாக கூறப்படுவது உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் எதிர் கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் இன்று நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.

மாநிலங்களவை இன்று கூடியதும், பல்வேறு துறை சார்ந்த நாடாளுமன்ற நிலைக்குழுவின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

தொலைதொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் சார்ந்த போலி செய்திகளை களைவது தொடர்பான பரிந்துரைகளை உள்ளடக்கிய அறிக்கையை மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் அவையில் சமர்ப்பித்து பேசினார்.

இதனை தொடர்ந்து அவைத்தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் பூஜ்ஜிய நேரத்தை

எடுத்துக்கொள்ள முயன்ற போது எதிர்கட்சி உறுப்பினர்கள் நீட் விவகாரத்தில் மாணவர்கள் தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளை எழுப்பி முழக்கமிட்டனர்.

இதனால் நிலவிய அமளி காரணமாக மாநிலங்களவை வரும் 3ஆம்தேதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

மக்களவையிலும் கேள்வி நேரத்தை அவைத்தலைவர் தொடங்க முயன்ற போது எதிர்கட்சியினர் நீட் விவகார தாக்குதல் பிரச்சனையை எழுப்பி உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா இது தொடர்பாக அறிக்கை வெளியிட வேண்டும் என்று கோரினார்கள்.

இதனால் நிலவிய கூச்சல் குழப்பங்களால் மக்களவை முதலில் நண்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது,

மீண்டும் அவை கூடியபோது ஜம்மு காஷ்மீர் மறு சீரமைப்பு 130-ஆவது சட்ட திருத்த மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் அறிக்கை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசத்தை வரும் குளிர்கால கூட்டத்தொடரில் முதல் வாரம் வரை, நீட்டித்து அவை அனுமதி வழங்கியுள்ளது.

அதனை தொடர்ந்து பிறப்பு இறப்பு பதிவேடு சட்ட திருத்த மசோதா பலத்த அமளியின் ஊடே மக்களவையில் எந்த விவாதமும் இன்றி நிறைவேறியது.

அமளி தொடரவே அவை வரும் 3ஆம் தேதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

*************

கீர்த்தி வர்த்தன் சிங்

பயங்கரவாதத்தை வேரோடு களையும் வகையில் 31 நாடுகளுடன் இணைந்து கூட்டு பணிக்குழுவை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளதாக வெளியுறவுத்துறை இணை அமைச்சர் திரு. கீர்த்திவர்த்தன் சிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் எழுத்து பூர்வமாக அவர் அளித்த பதிலில் இதற்காக 6 பல்முனை குழுக்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

பாகிஸ்தான் தனது எல்லை பகுதிகளை எவ்வகையிலும் தீவிரவாதத்திற்கு பயன்படுத்த அனுமதிக்க கூடாது என்று இந்நாடுகள் கோரியிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து இந்தியா தனது எல்லை பகுதிகளை பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்க மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை பல நாடுகள் அங்கீகரித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

*************

மன்சூக்மாண்டவியா

நீடித்த பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்பு உருவாக்கத்திற்கு அரசு மற்றும் தொழில் நிறுவனங்கள், உரிமையாளர்கள் பணியாளர்களுக்கு இடையே சுமூக நட்புறவின் அவசியத்தை மத்திய தொழிலாளர் வேலை

வாய்ப்புத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் உலகளாவிய தொழில் நிறுவன நட்புறவு தொடர்பான உயர்நிலை கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், மாறிவரும் தொழில்நுட்பங்களும், சர்வதேச அணுகுமுறைகளும் தொழில் நிறுவனங்களில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றார்.

மத்திய அரசின் தொழிலாளர் நல சீர்திருத்தங்கள், பணியாளர்களின் உரிமைகளை பாதுகாத்து, சமூக பாதுகாப்பை வலுப்படுத்தி, தரமான வேலை வாய்ப்பை உருவாக்கும் சூழலை நோக்கமாக கொண்டது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

*************

ஆயுஷ்

ஆயுஷ் துறையில் புதுமையான கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆயுஷ் அமைச்சகம் மற்றும் செயற்கை நுண்ணறிவு அமைப்பின் இடையே கையெழுத்தாகியுள்ளது.

ஆராய்ச்சி, மின்னணு சார்ந்த சுகாதாரம், ஆயுஷ் துறையில் புதுமையான கண்டுபிடிப்புகள், திறன் கட்டமைப்பு, போன்றவற்றை முன்னெடுத்து செல்லும் வகையில் இந்த ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது.

*************

வருமான வரி

2025-26 ஆம் ஆண்டிற்கான வருமான வரி கணக்குகளை தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் இன்றுடன் நிறைவடைகிறது.

தனிநபர், வரி செலுத்தும் ஊழியர், வரி தணிக்கை தேவைப்படாதோருக்கு மட்டுமே இது பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரி தணிக்கை தேவைப்படாத தனிபட்ட முறையில் பணியாற்றுவோர் மற்றும் வணிகம் மூலம் வருவாய் ஈட்டுவோர் அடுத்த மாதம் 31ஆம் தேதிக்குள் கணக்குகளை தாக்கல் செய்ய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

*************

முதலமைச்சர்

மேகதாது அணை விவகாரம் தொடர்பாக முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் தலைமையில் சென்னை தலைமை செயலகத்தில் ஆலோசனைக்கூட்டம் இன்று நடைபெறுகிறது.

சட்டத்துறை அமைச்சர் திரு.நிர்மல் குமார், தலைமை செயலாளர், துறை சார்ந்த செயலாளர்கள் மற்றும் அதிகாரிகள் இதில் பங்கேற்றுள்ளனர்.

மேகதாது அணை விவகாரம் தொடர்பாக கர்நாடகாவில் நாளை மறுநாள் அனைத்து கட்சி கூட்டம் நடைபெறுவதை அடுத்து இன்றைய ஆலோசனைக்கூட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

இதனிடையே காவிரி விவகாரம் தொடர்பாக கர்நாடக முதலமைச்சர் திரு. டி.கே.சிவகுமார் அம்மாநில நீர்வளத்துறையினருடன் அவசர ஆலோசனையை இன்று மேற்கொண்டுள்ளார்.

காவிரி ஒழுங்காற்று குழுவின் பரிந்துரை படி தமிழகத்திற்கு 3 ஆயிரத்து 500 கன அடி தண்ணீரை 15 நாட்கள் கர்நாடகம் விடுவிக்க வேண்டும் என்று காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ள பின்னனியில் இந்த கூட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

*************

நிர்மல் குமார்

காவிரியில் கர்நாடகா தண்ணீர் திறக்காதது குறித்து ஒரிரு நாட்களில் முடிவெடுக்கப்படும் என்று மாநில சட்டத்துறை அமைச்சர் திரு.நிர்மல் குமார் கூறியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளித்த அவர் தமிழ்நாட்டில் கூடுதல் மின் கட்டணம் தொடர்பாக 3 லட்சத்து 70 ஆயிரம் பேர் புகார் அளித்திருப்பதாக வாட்ஸ் அப் செய்திகளை மேற்கோள்

காட்டி திமுக தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் கூறியிருப்பது தவறான தகவல் என்று குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் இந்தாண்டு கூடுதல் மின் கட்டணம் செலுத்துவோரின் எண்ணிக்கை குறைந்துள்ளதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

வாய்ஸ்

*************

ஆனந்த்

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி மயிலம் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் மாநில ஊரக வளர்ச்சி நீர்வளத்துறை அமைச்சர் திரு.ஆனந்த் பல்வேறு புதிய கட்டிடங்களை இன்று திறந்துவைத்தார்.

டாக்டர் எம்.ஜி.ஆர் அரசு கலை அறிவியல் கல்லூரியில் பல்வேறு பிரிவுகளில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவிகளுக்கு ஊக்க பரிசுகளையும் அவர் வழங்கினார்.

கண்டமானஅடி ஆரம்ப சுகாதார மருத்துவமனையில் 15 லட்ச ரூபாய் மதிப்பிலான ஹோமியோபதி மருத்துவமனையையும்,

கொய்யாதோப்பு பகுதியில் புதிய அங்கன்வாடி மையத்தையும் அவர் திறந்துவைத்தார்.

ஆட்சித்தலைவர் திரு.ஷேக் அப்துல் ரஹ்மான் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

*************

எடப்பாடி

வேளாண் நிதிநிலை அறிக்கையில் பயிர் கடன் முழுமையாக தள்ளுபடி செய்யும் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

காவிரி விவகாரம் குறித்து பெச்சுவார்த்தை நடத்த கர்நாடகம் செல்லும் முடிவை முதலமைச்சர் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

விவசாயிகளின் வாழ்வாதாரமான காவிரி நீர் உரிமையை பாதுகாக்க, அரசு அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட வேண்டும், என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

*************

செந்தில்பாலாஜி

டாஸ்மாக் முறைகேடு வழக்கு தொடர்பாக முன்னாள் அமைச்சர் திரு.செந்தில் பாலாஜியை கைது செய்ய உச்சநீதிமன்றம் இன்று இடைக்கால தடை விதித்துள்ளது.

திரு.செந்தில் பாலாஜி தனது பாஸ்போட்டை ஒப்படைக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

*************

நாகை

நாகை மாவட்டம் வேதாரண்யத்தில் உப்பு உற்பத்தி முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒரு டன் உப்பு ஆயிரத்து 500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*************

அஞ்சல் கோட்டம்

திருச்சி அஞ்சல் கோட்டத்திற்குட்பட்ட 5 அஞ்சல் நிலையங்களில் சர்வதேச பார்சல் சேவைக்கான பேக்கிங் வசதி அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதாக இதன் முதுநிலை அஞ்சலக கண்காணிப்பாளர் திரு.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

விலை உயர்ந்த பொருட்கள் மற்றும் ஆவணங்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இந்த பார்சல் சேவை இருக்கும் என கூறினார்.

வாய்ஸ்

*************

வானிலை

வளிமண்டல காற்றழுத்ததாழ்வு பாதை காரணமாக கோவை திருநெல்வேலி மாவட்ட மலை பகுதிகள் நீலகிரி தேனி கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று இடி மின்னல்

காற்றுடன் கூடிய கன, மிக கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாளையும் இப்பகுதிகளில் கன மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

தமிழக கடலோரம், மன்னார்வளைகுடா, குமரிக்கடல் தென்மேற்கு வங்க கடல் அரபிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இதற்குட்பட்ட பகுதிகளுக்கு வரும் 3ஆம் தேதிவரை செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

*************

பேட்மிட்டன்

தாய்பே ஓப்பன் பேட்மிட்டன் மகளிர் ஒற்றையர் காலிறுதியில் உன்னாட்டி ஹூடா – **Devika Sihag**-ஐ தற்போது எதிர்கொண்டுள்ளார்.

மற்றொரு போட்டியில் **Tanvi Sharma** – தாய்லாந்தின் **Supanida Katethong** –உடன் மோதுகிறார்.

ஆடவர் ஒற்றையர் காலிறுதியில் இந்தியாவின் கிரண் ஜார்ஜ் – ஜப்பானின் Yudai Okimoto-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது